DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 46/2022**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | லார்டு பிரபாசன் | Father Name – | அய்யலுநாயுடு |
| Age | 56 | Village – | அழகர்நாயக்கன்பட்டி |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026.

பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை.

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு முதல் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். 16.04.1984 ம்தேதியிட்ட UDR பட்டா மற்றும் வரைபடம் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும், நாகையசாமி நாயுடு, A.N.அய்யலுநாயுடு பெயரில் செலுத்திய கெஸ்தி ரசீதுகள் நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும், 01.09.1989 ம் தேதியிட்ட குடும்ப ஏற்பாட்டில் உள்ள பாகப்பிரிவினை பத்திரத்தின்படி தாவா சொத்து அய்யலுநாயுடுவின் பங்குக்கான சான்று சான்றளிக்கப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும், 30.04.2008 ம் தேதியிட்ட 1 வது வாதிக்கு ஆதரவாக A.R.கோச்சடை முத்தையா வழங்கிய பொது அதிகார பத்திரத்தை காட்டும் வில்லங்க சான்றிதழ் நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும், 18.07.2012 ம் தேதியிட்ட வில்லங்கத்தில் உள்ள பதிவுகளின் சான்று நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும், 28.11.2023 ம் தேதியிட்ட இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் இணையதள நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகும், 11.12.2023 ம் தேதியிட்ட உத்தமபாளையம் வட்டாட்சியருக்கு பிரதிவாதியின் அண்ணன் N.A.சுதர்ஸன் அவர்கள் அனுப்பிய கடிதம் நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும், 28.06.2024 ம் தேதியிட்ட பிரதிவாதியின் அண்ணன் N.A.சுதர்ஸன் பட்டா மாறுதல் செய்ய கோரியதற்கான ஒப்புகை சீட்டு அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகும், 27.10.2022 ம் தேதியிட்ட பிரதிவாதியின் அண்ணன் சுதர்ஸன் தேவாரம்

காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் **பி.வா.சா.ஆ.9** ஆகும், 01.11.2025 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் **பி.வா.சா.ஆ.10** ஆகும், 08.11.2023 ம் தேதியிட்ட 270/4A2 நிலத்தின் வரைபடம் இணையதள நகல் **பி.வா.சா.ஆ.11** ஆகும், 14.07.2025 ம் தேதியிட்ட கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்ட சிட்டா சான்றளிக்கப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ.12** ஆகும், எனது ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **பி.வா.சா.ஆ.13** ஆகும்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி 10.08.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.08.03 16:33:39 +0530

District Munsif,
Bodinayakanur.